மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏ, பி, சி, என்று தரம் பிரிப்பதுபற்றி ஓட்டல் முதலாளிகளைச் சந்தித்துப் பேசுகிறபோது சொன்னேம். சென்ற மாதம்தான் சந்தித்துப் பேசினேன். மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு, இந்த மாதம் சட்டமன்றம் நடக்கிற காரணத்தினுல் நேரம் கிடைக்கவில்லை. ஆகவே, மீண்டும் அவர்களைச் சந்தித்து அதுபற்றி விவாதித்துச் சிக்கிரத்தில் சிறந்த முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஓட்டல்களைத் தரம் பிரிப்பது பற்றி ஆலோசித்துச் செய்வதாகச் சொன்னார்கள். அப்படித் தரம் பிரிக்கப்படுகிறபோது, ஏ, பி என்று இரண்டு பிரிவு ஓட்டல்களிலும் புகார்ப் புத்தகம் வைப்பதற்கும், அந்தப் புகார்ப் புத்தகங்களை அடிக்கொரு தடவை அதிகாரிகள் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் சட்ட ரீதியாக வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது நல்ல யோசனை. அப்படி ஓட்டல்கள் தரம் பிரிக்கப்படும்போது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

House Rent Allowance for non-teaching staff

* 240 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

Whether there is any proposal by this Government to extend the benefits of House Rent Allowance to the non-teaching staff of the schools also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தச் சலுகை மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கும் கொடுப்பதற்காக உத்தரவுகள் வெளியிடப்பட்டு விட்டன.

DR. H. V. HANDE : While we are thankful to the Government for having issued this order recently during the budget debate may I know from the Hon. Minister whether the other grievances, which had been put forth by them regarding continuity of service, etc. (If one non-teaching member of staff is transferred from one institution to another, he loses continuity of service) would be considered by Government, They had put forth several other demands before Government. Have Government considered those things. It will not cost the exchequer also much if these demands are complied with. Will the Government come forward to consider those demands also sympathetically ? If so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கோரிக்கைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதில் என்னென்ன சங்கடங்கள் இருக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து, சங்கடங்கள் இல்லாத நிலைமை ஏற்படுமானல் தக்க முடிவு எடுக்கலாம். சில இடங்களில் அவர்களை மாணவர்கள் விரும்புகிறார்கள். சங்கடம் ஏற்படாத சூழ்நிலை ஏற்படுமானல் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படும்.

1971 ஜூலை 15]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுப்பதாகக் கூறப்பட்டது. எந்த மாதம் முதற்கொண்டு அது அமலுக்கு வந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆசிரியரல்லாத மற்ற அலுவலர்களுக்கும் வீட்டு வாடகைப்படி 1—8—1970-ம் தேதி ஆணையிடப்பட்டு, 20—10—1970-லே அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

House Rent Allowance for Aided School Teachers

• 241 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned House Rent Allowance to all the Aided School Teachers in the State ;

(*b*) whether the Government Order in question has been communicated to the Heads of Anglo-Indian Schools by the Director of School Education ; and

(*c*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம், 1—4—1970-ல் இருந்து.

(ஆ) இல்லை.

(இ) ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் பெறும் ஊதியம் மற்றும் படிகள், ஏனைய அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் பெறுவன போலல்லாமல் மாறுபட்டவையாக இருந்தன. 10—2—1971-ல் பிறப்பித்த அரசு ஆணைப்படி 2—10—71-ல் இருந்து, சம்பள ஊதியம், வீட்டு வாடகைப்படி, முதலிய படிகள் மற்ற அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று, ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Is it a fact that though this order was passed in 1st April 1970, in para 3 of the order referred to, the Director of School Education has been requested to bring this order to the notice of all aided schools but it was submitted that in this connection a copy of this order had not been communicated to the heads of Anglo-Indian schools in the State, though they are aided schools under the Director of School Education? May I know whether complaints have been received that the order had not been communicated to them and is it a fact that as a result of this Anglo-Indian teachers are really getting less than what they were getting before in spite of the recommendations of the Second Pay Commission?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கு 'இல்லை' என்று பதிலளிக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது சங்கடங்கள் இருக்குமானால் அவை தனியாக ஆராயப்பட்டுத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.